















www.abdulkalam.com

Sairam INSTITUTIONS
www.sairamgroup.in





## அப்துல் கலாம் இலட்சிய இந்தியா இயக்கம்
## மற்றும்
## சாய்ராம் கல்விக் குழுமம்
இணைந்து

# வெள்ள நிவாரணம் வழங்கல்

**புகைப்படம் மற்றும் செய்தித்தாள் தொகுப்புகள்**

# வெள்ள நிவாரணம் வழங்கல்

## கிருஷ்ணா நகர்













www.abdulkalam.com

Sairam INSTITUTIONS
www.sairamgroup.in

# வெள்ள நிவாரணம் வழங்கல்

## சைதாப்பேட்டை














## வெள்ள நிவாரணம் வழங்கல்

# சைதாப்பேட்டை

















## வெள்ள நிவாரணம் வழங்கல்

# சோமங்கலம்













www.abdulkalam.com

Sairam INSTITUTIONS
www.sairamgroup.in

# வெள்ள நிவாரணம் வழங்கல்

## மூகாம்பிகை நகர்











www.abdulkalam.com

Sairam INSTITUTIONS
www.sairamgroup.in

## FOOD PACKETS DISTRIBUTION - DETAILS

| S.NO | DATE | PLACE | DESCRIPTION | QTY |
|---|---|---|---|---|
| 1 | 15.11.2015 | VARADHARAJA PURAM | LUNCH | 1200 Nos. |
| 2 | 16.11.2015 | MUDICHUR (KRISHNA NAGAR) | LUNCH | 900 Nos. |
| 3 | 16.11.2015 | PAZHATHANDALAM | DINNER | 100 Nos. |
| 4 | 17.11.2015 | KUNDRATHUR | BREAK FAST (Police) | 50 Nos. |
| 5 | 17.11.2015 | VARADHARAJA PURAM | LUNCH | 565 Nos. |
| 6 | 17.11.2015 | PUTHANDALAM | DINNER | 150 Nos. |
| 7 | 18.11.2015 | KUNDRATHUR | BREAK FAST (Police) | 30 Nos. |
| 8 | 18.11.2015 | VARADHARAJA PURAM | LUNCH | 1500 Nos. |
| 9 | 19.11.2015 | KUNDRATHUR | BREAK FAST (Police) | 30 Nos. |
| 10 | 19.11.2015 | KUNDRATHUR | LUNCH (Police) | 60 Nos. |
| 11 | 20.11.2015 | KUNDRATHUR | BREAK FAST (Police) | 40 Nos. |
| 12 | 20.11.2015 | KUNDRATHUR | LUNCH (Police) | 40 Nos. |
| 13 | 21.11.2015 | KUNDRATHUR | BREAK FAST (Police) | 40 Nos. |
| 14 | 21.11.2015 | KUNDRATHUR | LUNCH (Police) | 50 Nos. |
| 15 | 22.11.2015 | KUNDRATHUR | BREAK FAST (Police) | 50 Nos. |
| 16 | 22.11.2015 | KUNDRATHUR | LUNCH (Police) | 50 Nos. |
| 17 | 23.11.2015 | KUNDRATHUR | BREAK FAST (Police) | 50 Nos. |
| 18 | 23.11.2015 | KUNDRATHUR | LUNCH (Police) | 50 Nos. |
| 19 | 24.11.2015 | KUNDRATHUR | BREAK FAST (Police) | 50 Nos. |
| 20 | 24.11.2015 | KUNDRATHUR | LUNCH (Police) | 50 Nos. |
| 21 | 25.11.2015 | KUNDRATHUR | BREAK FAST (Police) | 50 Nos. |
| 22 | 25.11.2015 | KUNDRATHUR | LUNCH (Police) | 50 Nos. |
| 23 | 25.11.2015 | T.NAGAR / KODAMBAKKAM | LUNCH | 1500 Nos. |
| 24 | 26.11.2015 | KUNDRATHUR | BREAK FAST (Police) | 50 Nos. |
| 25 | 26.11.2015 | KUNDRATHUR | LUNCH (Police) | 50 Nos. |
| 26 | 27.11.2015 | KUNDRATHUR | BREAK FAST (Police) | 10 Nos. |
| 27 | 27.11.2015 | VARADHARAJA PURAM (DHARKAST) | LUNCH | 1500 Nos. |
| 28 | 01.12.2015 | POONTHANDALAM | LUNCH | 500 Nos. |
| 29 | 03.12.2015 | T.NAGAR | DINNER | 1000 Nos. |
| 30 | 04.12.2015 | INDRANAGAR | LUNCH | 500 Nos. |
| 31 | 04.12.2015 | T.NAGAR | DINNER | 2000 Nos. |
| 32 | 05.12.2015 | ERUMAIYUR | LUNCH | 1000 Nos. |
| 33 | 06.12.2015 | VARADHARAJA PURAM | LUNCH | 1000 Nos. |
| 34 | 06.12.2015 | ABDULKALAM INDIA FOUNDATION | DINNER | 1000 Nos. |
| 35 | 07.12.2015 | ABDULKALAM INDIA FOUNDATION | LUNCH | 2400 Nos. |
| 36 | 07.12.2015 | KUNDRATHUR | DINNER | 50 Nos. |
| 37 | 08.12.2015 | VARADHARAJA PURAM | LUNCH | 2500 Nos. |
| 38 | 08.12.2015 | T.NAGAR (ABDULKALAM INDIA FOUNDATION | Veg. Briyani | 2500 Nos. |
| 39 | 08.12.2015 | MUDICHUR MEDICAL CAMP | Briyani (Doctors) | 50 Nos. |
| 40 | 08.12.2015 | MUDICHUR MEDICAL CAMP | DINNER | 35 Nos. |
| 41 | 08.12.2015 | BARANIBUTHOOR | LUNCH | 2000 Nos. |
| 42 | 10.12.2015 | BARANIBUTHOOR | LUNCH | 500 Nos. |
| | | | **TOTAL** | **25300 Nos.** |

www.abdulkalam.com

# RELIEF MATERIALS DISTRIBUTION AREA WISE DETAILS

Sairam INSTITUTIONS
www.sairamgroup.in

| Date | Area | Bedsheet | Towel | Sarees | Nighty | Lungi | Matt |
|---|---|---|---|---|---|---|---|
| 07.12.2015 | General Hospital | 50 | | | | | |
| | Cleaners | 15 | | | | | |
| | Krishna Nagar | 20 | | | | | |
| | Krishna Nagar | 700 | | | | | |
| | Sankara Vidyalaya, East Tambaram | 100 | | | | | |
| | Indira Nagar Pazhanthandalam | 300 | | | | | 300 |
| | Dr. Deeraj Reddy T. Nagar | 500 | | | | | |
| 08.12.2015 | Varadharajapuram Darkast Erumaiyur | 500 | | | | | |
| | Uduvum Ullam | | | 50 | 50 | 25 | |
| 09.12.2015 | Gangapuri | 160 | 160 | | | | |
| | Perungalathur | 200 | | | | | 200 |
| | Moulivakkam | 200 | | | | | |
| | Kottivakkam | 300 | | | | | |
| | Krishna Nagar<br>Mookambigai<br>Nagar<br>Somangalam Road | 514<br>325<br>275 | 450<br>250<br>200 | <br>75<br>50 | <br>225<br>200 | <br>250<br>225 | <br>325<br>275 |
| 10.12.2015 | Somangalam Mudichur | 25<br>200 | | | | | |
| | Madampakkam | 300 | | | | | |
| | T. Nagar | 50 | 50 | | | | |
| | Madipakkam & Velacherry | 50 | | | | | |
| 12.12.2015 | Dr.Naveen | 200 | | | | | |
| 13.12.2015 | Kovilancheri | 266 | 890 | 25 | 25 | 0 | |
| 14.12.2015 | Poonthandalam | 750 | | | | | |
| | **TOTAL** | **6000** | **2000** | **200** | **500** | **500** | **1100** |

## Other Materials

| Materials | Quantity |
|---|---|
| Candle | 3500 |
| Biscuits & Rusks with Jam | 3900 |
| Bread and Rusk | 2500 |
| Surgical Masks | 3000 |
| Musquito Coil (box) | 1020 |
| Water Bottles | 5000 |
| Water Packets | 3000 |
| Match Box & Carry Bags | 1600 |
| Nilavembu Powder | 2000 packets |
| Sanitary Napkins | 450 packets |



Daily 40,000 litres of purified drinking water distributed in flood affected areas

www.abdulkalam.com

Sairam INSTITUTIONS
www.sairamgroup.in

# வெள்ள நிவாரணம் வழங்கல்

## முடிச்சூர்



















# வெள்ள நிவாரணம் வழங்கல்

## முடிச்சூர்











www.abdulkalam.com
Sairam INSTITUTIONS
www.sairamgroup.in

ఆంధ్రజ్యోతి
TELUGU DAILY
10.12.2015

### సాయిరాం విద్యాసంస్థల ఆధ్వర్యంలో

# సహాయాల పంపిణీ




సాయిరాం విద్యాసంస్థల ఆధ్వర్యంలో నిర్వహిస్తున్న ఉచిత వైద్యశిబిరం

**ప్యారీస్:** సాయిరాం విద్యాసంస్థల ఆధ్వర్యంలో వరద ప్రభావిత ప్రాంతాల్లో గత వారం రోజులుగా సహాయాల పంపిణీ కార్యక్రమం, ఉచిత వైద్యశిబిరాలు నిర్వహించారు. రాష్ట్రంలో భారీగా కురిసిన వర్షాలకు చెన్నై, కాంచీపురం, తిరువళ్లూరు జిల్లాలు తీవ్రంగా దెబ్బతిన్నాయి. వరదల్లో చిక్కుకున్న ప్రజలను ఆదుకొనేందుకు స్థానిక తాంబరంలో వున్న సాయిరాం విద్యాసంస్థలు ముందుకు వచ్చాయి. తాంబరం పరిసరాల్లో వున్న 20కి పైగా గ్రామాల్లో బాధితులకు దుప్పట్లు, టవళ్లు, ధోవతులు, చీరలు, ఆహారం పంపిణీ చేశారు. కనీవినీ ఎరుగని రీతిలో చాలా ఏళ్ల అనంతరం కురిసిన వర్షాలకు పూందండలం, ఇందిరానగర్, మూకాంబిగై నగర్, ముడిచ్చూర్, వరదరాజపురం, ఏరిమయూర్, భరణిపుత్తూర్, ఎంజీఆర్ నగర్, పెరియార్‌నగర్, దర్గాస్, ఏట్టాయపురం, సోమంగళం తదితర నివాసప్రాంతాలు నీట మునిగి ఇప్పటికీ తేరుకోలేదు. ఈ ప్రాంతాల్లో అంటువ్యాధులు ప్రబలకుండా సాయిరాం విద్యాసంస్థలు ఉచిత వైద్యశిబిరాలు నిర్వహించి వైద్యబృందాల ద్వారా వైద్యపరీక్షలు నిర్వహిచడంతో పాటు మందులను కూడా పంపిణీ చేశాయి. ఈ సంస్థల నిర్వాహకులు, ప్రొఫెసర్లు, విద్యార్థులు, సిబ్బంది సహాయ కార్యక్రమాల్లో పాల్గొని సేవలందించారు.

மாலை தமிழகம்

09.12.2015




தாம்பரம் பகுதி பழந்தண்டலம், பூந்தண்டலம், இந்திராநகர், மூகாம்பிகை நகர் ஆகிய பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சாய்ராம் கல்வி குழுமம் சார்பாக இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

www.abdulkalam.com

www.sairamgroup.in

# வெள்ள நிவாரணம் வழங்கல்

## பெருங்களத்தூர்















# வெள்ள நிவாரணம் வழங்கல்

## பரணிபுத்தூர்















www.abdulkalam.com
Sairam INSTITUTIONS
www.sairamgroup.in

தின இதழ்
09.12.2015



பெரும் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சாய்ராம் கல்விக் குழுமத்தின் சார்பாக மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

# நிவாரணப் பொருள் வழங்கல்

**சென்னை, டிச. 10–**

பெரும் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சாய்ராம் கல்விக் குழுமத்தின் சார்பாக தொடர்ந்து 6 நாட்களாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து நிவாரணமாக உணவு பொருட்கள், போர்வை, வேட்டி சேலைகள், துண்டு (டவல்) மற்றும் உணவுகள் வழங்கப்பட்டன. மேலும் சாய்ராம் மருத்துவக் கல்லூரிகளின் சார்பாக இலவச மருத்துவ முகாம் அமைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், நில வேம்பு குடிநீர், மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

இந்த முகாம்கள் தாம்பரம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் உள்ள புழுந்தண்டலம், பூந்தண்டலம், இந்திரா நகர், மூகாம்பிகை நகர், முடிச்சூர், வரதராஜபுரம், எருமையூர், பரணிபுத்தூர், எம்.ஜி.ஆர் நகர், பெரியார் நகர், தர்காஸ், எட்டையபுரம், சோமங்கலம் உள்ளிட்ட இடங்களில் நிவாரணம் மற்றும் மருந்து பொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

மாலை தமிழகம்
10.12.2015

# சாய்ராம் கல்வி குழுமம் சார்பில் வெள்ள நிவாரண உதவி



**சென்னை, டிச. 10-**

அப்துல் கலாம் இலட்சிய இந்திய இயக்கம் மற்றும் சாய்ராம் கல்வி குழுமம் இணைந்து மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்கும் நிகழ்ச்சி தாம்பரம் மற்றும சுற்று வட்டார பகுதியில் உள்ள கிருஷ்ணா நகர், முடிச்சூர், வரதராஜபுரம், மூகாம்பிகை நகர், சோமங்கலம், எருமையூர், பரணிபுத்தூர், பழந்தண்டலம், பூந்தண்டலம், இந்திராநகர், எம்.ஜி.ஆர். நகர், பெரியார் நகர், தர்காஸ், எட்டையபுரம் உள்ளிட்ட இடங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போர்வைகள், துண்டு, பாய்கள், உணவு பொருட்கள், குடிநீர் ஆகியவை வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் அப்துல் கலாம் அறிவியல் ஆலோசகர் வி.பொன்ராஜ் மற்றும் சாய்ராம் கல்வி குழுமத்தின் முதன்மை நிர்வாகி சாய்பிரகாஷ் லியோமுத்து ஆகியோர் கலந்து கொண்டு நிவாரண உதவிகளை வழங்கி பேசினர்.

மேலும் சாய்ராம் மருத்துவக் கல்லூரிகளின் சார்பாக இலவச மருத்துவ முகாம் அமைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், நிலவேம்பு குடிநீர், மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டன.

www.abdulkalam.com
www.sairamgroup.in

# வெள்ள நிவாரணம் வழங்கல்

## வரதராஜபுரம்







# வெள்ள நிவாரணம் வழங்கல்

## பழந்தண்டலம், பூந்தண்டலம்










www.abdulkalam.com
Sairam INSTITUTIONS
www.sairamgroup.in

மக்கள் குரல்
நடுநிலை நாளேடு
10.12.2015



## தாம்பரம் பகுதியில் சாய்ராம் கல்வி குழுமம் அப்துல் கலாம் இயக்கம் கூட்டாக உதவி நடவடிக்கை

சென்னை, டிச. 10–

அப்துல் கலாம் லட்சிய இந்திய இயக்கம் மற்றும் சாய்ராம் கல்விக் குழுமம் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டது.

தாம்பரம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் உள்ள கிருஷ்ணா நகர், முடிச்சூர், வரதராஜபுரம், மூகாம்பிகை நகர், சோமங்கலம், எருமையூர், பரணிபுத்தூர், பழந்தண்டலம், பூந்ததண்டலம், இந்திரா நகர், எம்.ஜி.ஆர்.நகர், பெரியார் நகர், தர்காஸ், எட்டையபுரம் உள்ளிட்ட இடங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போர்வைகள் துண்டு, பாய்கள், உணவு பொருட்கள், குடிநீர் ஆகியவை வழங்கப்பட்டன.

இதில் அப்துல் கலாம் அறிவியல் ஆலோசகர் வி.பொன்ராஜ் மற்றும் சாய்ராம் கல்வி குழுமத்தின் முதன்மை நிர்வாகி சாய்பிரகாஷ் லியோமுத்து வழங்கினர். இலவச மருத்துவ முகாமை நடத்தினர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், நில வேம்பு குடிநீர், மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

பொன்ராஜ் கூறுகையில், வெள்ளம் வடிந்து விட்டது. குப்பை தேங்கி உள்ளது. அதை முழுவதுமாக அகற்ற மாநகராட்சி, நகராட்சிகளால் மட்டும் இயலாது. தொண்டு நிறுவனத்தினர், இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் இணைந்து பணிபுரிய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

நிவாரண உதவி அளித்தோர், எங்களின் இயக்கத்திற்கு, ஒரு கோடி ரூபாய் மதிப்பு பொருட்களை வழங்கி உள்ளனர். 20 டிரக்குகளில் அந்த பொருட்களை கடலூர் மற்றும் சென்னை அனுப்பி உள்ளோம் என்றார்.

மூன்று நாட்கள் பெய்ய வேண்டிய 45, செ.மீ. மழை, ஒரே நாளில் பெய்துள்ளது. ''பொலாரி மீட்டர் ராடார்'' என்ற தொழில் நுட்பம் மூலம் மழை அளவை கணக்கிட முடியும். நாம் அந்த தொழில் நுட்பத்தை பயன்படுத்த வில்லை. சுனாமி எச்சரிக்கை தொழில்நுட்பம் மட்டும் போதாது.

இந்த தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தி, மேகத்தின் உள்ளே இருக்க கூடிய மழையின் அளவை தெரிந்து கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

# மாலைமலர்

10.12.2015



அப்துல்கலாம் லட்சிய இந்திய இயக்கம் மற்றும் சாய்ராம் கல்விக் குழுமம் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்கும் நிகழ்ச்சி தாம்பரம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் உள்ள கிருஷ்ணா நகர், முடிச்சூர், வரதராஜபுரம், மூகாம்பிகை நகர் பகுதிகளில் நடந்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு போர்வைகள், துண்டு, பாய்கள், உணவு பொருட்கள், குடிநீர் ஆகியவற்றை அப்துல்கலாம் அறிவியல் ஆலோசகர் பொன்ராஜ் மற்றும் சாய்ராம் கல்வி குழுமத்தின் முதன்மை நிர்வாகி சாய்பிரகாஷ் லியோமுத்து ஆகியோர் வழங்கினார்கள்.

www.abdulkalam.com
Sairam INSTITUTIONS
www.sairamgroup.in

## வெள்ள நிவாரணம் வழங்கல்

### நடுவீரப்பட்டு, பழந்தண்டலம்

















www.abdulkalam.com

Sairam INSTITUTIONS

www.sairamgroup.in

# வெள்ள நிவாரணம் வழங்கல்

## கோவிலஞ்சேரி

















www.abdulkalam.com

Sairam INSTITUTIONS

www.sairamgroup.in

# தினசெய்தி

10.12.2015



தாம்பரம் கிருஷ்ணா நகர் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை முன்னாள் குடியரசு தலைவர் அப்துல்கலாமின் அறிவியல் ஆலோசகர் பொன்ராஜ் வழங்கினார்.

## பேரிடரை எதிர்கொள்ள தொழில்நுட்பம் மேம்பட வேண்டும்

### அப்துல்கலாமின் அறிவியல் ஆலோசகர் பேட்டி

தாம்பரம், டிச. 10-

பேரிடரை எதிர்கொள்ளும் அளவுக்கு தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டும் என்று முன்னாள் குடியரசு தலைவர் அப்துல்கலாமின் அறிவியல் ஆலோசகர் கூறினார்.

தாம்பரம் கிருஷ்ணா நகர் பகுதியில் உள்ள முகாமில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 300-க்கும் மேற்பட்டோர் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். அவர்களுக்கு அப்துல்கலாம் லட்சிய இந்திய இயக்கம் மற்றும் தாம்பரம் சாய்ராம் கல்லூரி ஆகியன இணைந்து நிவாரண உதவிகளை வழங்கின.

நிவாரண பொருட்களை முன்னாள் குடியரசு தலைவர் அப்துல்கலாமின் அறிவியல் ஆலோசகராக பணிபுரிந்த பொன்ராஜ் வழங்கினார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

#### தொழில்நுட்பம் வளர...

மழை வெள்ளம் பேரிடர்களை எதிர்கொள்ளும் அளவுக்கு தொழில்நுட்பத்தை நாம் மேம்படுத்த வேண்டும். லட்சிய இந்திய இயக்கத்தை சேர்ந்த இளைஞர்கள் தாங்களாகவே முன் வந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கி வருகின்றனர்.

#### விழிப்புணர்வு தேவை

வெள்ளம் பாதித்த பகுதிகளில் குப்பை கழிவுகள் மலைபோல் குவிந்துள்ளன. இதனை அரசுடன் இணைந்து அகற்ற தனியார் தொண்டு நிறுவனங்கள் முன் வர வேண்டும். அறியாமையால் ஏற்பட்ட அழிவு இனி மீண்டும் ஏற்படாமல் இருக்க மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
10.12.2015

# 'வெள்ளம், பேரிடர்களை எதிர்கொள்ளும் தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டும்'



வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணப் பொருள்களை வழங்கிய அப்துல் கலாமின் அறிவியல் ஆலோசகர் வி.பொன்ராஜ்.

தாம்பரம், டிச. 9: விண்வெளி தொழில்நுட்பத்தில் வியக்கத்தக்க சாதனைகள் நிகழ்த்தி வரும் இந்தியா வெள்ளம் உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ளும் தொழில்நுட்ப அறிவாற்றலையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அப்துல் கலாமின் அறிவியல் ஆலோசகர் வி.பொன்ராஜ் கூறினார்.

'அப்துல்கலாம் லட்சிய இந்தியா' இயக்கத்துடன் இணைந்து ஸ்ரீசாய் ராம் கல்விக் குழுமம் மேற்கு தாம்பரம் கிருஷ்ணா நகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணப் பொருள்களை அவர் புதன்கிழமை வழங்கினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசியது இயற்கைச் சீற்றங்களுக்கான காரணங்களைக் கண்டறிந்து, அவற்றை சீரமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஏரி, குளங்களைத் தூர்வாரி ஆழப்படுத்த வேண்டும். வடிகால்வாய்களை முறையாகப் பராமரிக்க வேண்டும்.

அப்துல் கலாம் உருவாக்கிக் கொடுத்துள்ள நீர்வழிச்சாலைத் திட்டத்தைச் செயல்படுத்தினால் வெள்ளநீரை கடலில் வீணாகப் போய் கலக்காமல் சேமிக்க முடியும்.

மழையைச் சுமந்து வரும் மேகங்களின் ஈரப்பதத்தைக் கொண்டு எவ்வளவு மழை பெய்யும் என்பதைக் கண்டறியும் ரேடார் தொழில்நுட்பத்தை இன்னும் பயன்படுத்தவில்லை.

பேரிடர் குறித்து பொதுமக்களை எச்சரிக்கும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களையும் நாம் முறையாகப்பயன்படுத்தி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.

இந்த நெருக்கடியான வேளையில் அரசுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இணைந்து குப்பைகளை அகற்றி அந்த பகுதிகளில் சுகாதாரத்தைப் பேண பேருதவி புரிய முன்வர வேண்டும் என்றார் அவர்.

ஸ்ரீசாய்ராம் கல்விக் குழுமத் தலைவர் சாய் பிரகாஷ் லியோமுத்து, சாய்ராம் பொறியியல் கல்லூரி முதல்வர் ஜெயக்குமார், பேராசிரியர் மாறன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

www.abdulkalam.com

Sairam INSTITUTIONS
www.sairamgroup.in

# வெள்ள நிவாரணம் வழங்கல்

## இந்திரா நகர்









## கக்கன்ஜி தெரு









# வெள்ள நிவாரணம் வழங்கல்

## கெருகம்பாக்கம்

















www.abdulkalam.com

Sairam INSTITUTIONS
www.sairamgroup.in

தின இதழ்

10.12.2015

அப்துல்கலாம் இயக்கம் சார்பில்

## 300 பேருக்கு நிவாரண உதவி

தாம்பரம், டிச. 10–

சென்னையை அடுத்த தாம்பரம் கிருஷ்ணாநகர் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அப்துல்கலாம் லட்சிய இந்திய இயக்கம் மற்றும் தாம்பரம் சாய்ராம் கல்லூரி இணைந்து பாதிக்கப்பட்ட 300க்கும் மேற்பட்ட மக்களுக்கு அப்துல் கலாம் லட்சிய இயக்க தலைவர் பொன்ராஜ் பெட்சீட் துண்டுகளை வழங்கினார்.

உடன் சாய்ராம் கல்லூரி தலைமை செயல் அதிகாரி சாய்பிரகாஷ் லீயோமுத்து பேராசிரியர் மாறன் உடன் இருந்தனர்.



தாம்பரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அப்துல்கலாம் லட்சிய இந்திய இயக்கம் சார்பில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

தி இந்து

13.12.2015



அப்துல் கலாம் லட்சிய இந்திய இயக்கம் மற்றும் சாய்ராம் கல்விக் குழுமம் சார்பில் தாம்பரம், முடிச்சூர், வரதராஜபுரம், சோமங்கலம், பழந்தண்டலம் உள்ளிட்ட இடங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. அப்துல் கலாமின் அறிவியல் ஆலோசகர் வி.பொன்ராஜ், சாய்ராம் கல்விக் குழும முதன்மை நிர்வாகி சாய்பிரகாஷ் லியோமுத்து கலந்துகொண்டு நிவாரண உதவிகளை வழங்கினர்.

www.abdulkalam.com

Sairam INSTITUTIONS
www.sairamgroup.in

## கிருஷ்ணா நகர், இந்திரா நகர்

# இலவச மருத்துவ முகாம்













www.abdulkalam.com

Sairam INSTITUTIONS
www.sairamgroup.in

# திருத்துறைப்பூண்டி

## சாய்ராம் மெட்ரிக். மேல்நிலைப்பள்ளியில் வெள்ள நிவாரணம் வழங்கல்













www.abdulkalam.com

Sairam INSTITUTIONS
www.sairamgroup.in

தினமலர்

10.12.2015

# 'அறியாமையால் ஏற்பட்ட அழிவு இது'

தாம்பரம், டிச. 10–

''தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இருந்தால், இவ்வளவு பெரிய சேதத்தை தவிர்த்து இருக்க முடியும்; அறியாமையால் ஏற்பட்ட அழிவு இது,'' என, கலாம் உதவியாளர், பொன்ராஜ் பேசினார்.

அப்துல் கலாம் லட்சிய இந்தியா இயக்கம், சாய்ராம் கல்வி நிறுவனங்கள் இணைந்து, பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவி வழங்கும் நிகழ்ச்சி, மேற்கு தாம்பரம், கிருஷ்ணா நகர் பகுதியில், நேற்று நடந்தது.

இயக்கத்தின் சார்பாக, கலாம் அறிவியல் ஆலோசகர், பொன்ராஜ், பகுதிவாசிகளுக்கு, போர்வைகள், துண்டுகளை வழங்கினார்; நிலவேம்பு குடிநீரும் அளிக்கப்பட்டது.

பொன்ராஜ் பேசியதாவது:

வெள்ளம் வடிந்து விட்டது. குப்பை தேங்கி உள்ளது. அதை முழுவதுமாக அகற்ற, மாநகராட்சி, நகராட்சிகளால் மட்டும் இயலாது. தொண்டு நிறுவனத்தினர், இளைஞர்கள், பொதுமக்கள் என, அனைவரும் இணைந்து பணிபுரிய வேண்டும்.

இளைஞர்கள் ஒன்று கூடி, எழுச்சிகரமாக செயல்பட்டனர். தங்களுக்கு எந்த பாதிப்பு நேர்ந்தாலும் பரவாயில்லை என, கடினமாக உழைத்தனர்.




மேற்கு தாம்பரம், கிருஷ்ணா நகரில், அப்துல் கலாமின் அறிவியல் ஆலோசகர் பொன்ராஜ் நிவாரண உதவி வழங்கினார்.

நிவாரண உதவி அளித்தோர், எங்கள் இயக்கத்திற்கு, ஒரு கோடி ரூபாய் மதிப்பு பொருட்களை வழங்கி உள்ளனர். 20 டிரக்குகளில், அந்த பொருட்களை, கடலூார் மற்றும் சென்னைக்கு அனுப்பி உள்ளோம்.

மூன்று நாட்கள் பெய்ய வேண்டிய, 45 செ.மீ., மழை, ஒரே நாளில் பெய்துள்ளது. 'பொலாரி மீட்டர் ராடார்' என்ற தொழிநுட்பம் மூலம், மழை அளவை கணக்கிட முடியும். நாம் அந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தவில்லை.

சுனாமி எச்சரிக்கை தொழில்நுட்பம் மட்டும் போதாது. இந்த தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி, மேகத்தின் உள்ளே இருக்க கூடிய மழையின் அளவை தெரிந்து கொள்ள முடியும்.

உத்தரகண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பில் இருந்து, நாம் பாடம் கற்கவில்லை. மத்திய, மாநில அரசுகள், இந்திய வானிலை மையம், பேரிடர் மீட்பு துறை ஆகியவை இணைந்து, செயல்பட வேண்டும்.

நமது அறியாமையால் ஏற்பட்ட அழிவு தான் இது. தமிழகத்தில், 900 கி.மீ., நீர்வழிச்சாலைகளை ஏற்படுத்தி இருந்தால், மழைநீரும் வீணாகி இருக்காது.

இவ்வாறு அவர் பேசினார்.